**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். Crl.M.P 298 /2025**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

மனுதாரரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி **Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk**, என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வரதராஜன் | **வயது** | : | 57/2025 |
| **தந்தை பெயர்** | : | பாலசுப்பிரமணியன் | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |

**<u>நாள்: 09.01.2026</u>**

**<u>ம.சா.1</u>**

**Sworn Statement:**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். நான் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தில் 2018 முதல் 2021 வரை தலைவராக இருந்தேன். தற்போது முன்னால் தலைவர்கள் கொண்ட தலைவர்கள் குழுவில் நிர்வாக குழு உறுப்பினர் ஆவேன். 2021 முதல் 2024 வரை திரு.எஸ்.காமராஜ் என்பவர் தலைவராக பொறுப்பு வகித்தார். 2024 செப்ட்டம்பர் மாதம் அவரின் பதவிக்காலம் முடிவுற்றது. புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரிடம் அவர் பதவி வகித்தற்கான காலத்திற்கான வரவு செலவு கணக்குகளை மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைத்தார். வரவு செலவு கணக்கினை அறந்தாங்கி வர்த்தக சங்க தணிக்கை குழுவினர் தணிக்கை செய்து அதில் பல்வேறு முறைக்கேடுகள் நடைபெற்று இருப்பதாக நிர்வாக குழுவிடம் தெரிவித்தனர். நிர்வாக குழுவினர் முறையாக பட்டய கணக்கரிடம் ஒப்படைத்து அவரிடம் இருந்து ஆடிட்டர் ரிப்போர்ட் பெற்றனர். அந்த ஆடிட்டர் அறிக்கையில் முறைகேடு நடந்ததற்கு உண்டான முகாந்திரம் முன்னுப்பின் முரணான டேட்டா எண்ட்ரி தவறான கணக்குகள் தெரிவிக்கப்பட்டிருந்தது. அறந்தாங்கி வர்த்தக சங்கம் விதி எண் 19-ன் படி தலைவராக இருப்பவர் ரூ.500/- மட்டுமே கையிருப்பு வைத்திருக்க முடியும். 2021 முதல் 2024 வரை தலைவராக இருந்த திரு.காமராஜ் அவர்கள் மூன்று ஆண்டுகளில் சங்கத்திற்குண்டான வருமானமாக ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்தை அறந்தாங்கி வர்த்தக சங்கத்திற்கு உண்டான மாத சந்தா, ஆண்டு சந்தா, ஆயுள் சந்தா மற்றும் மண்டபத்தின் வாடகை மூலமாகவும், அறந்தாங்கி வீரமாகாளியம்மன் கோவில் 6 நாள் வர்த்தக சங்கத்திற்கு உண்டான மண்டகப்படி வசூலாக இந்த இனங்களின் வாயிலாக சங்கத்திற்கு வருமானம் பெறப்படுகிறது. இந்த ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சத்தை வங்கில் வரவு செலவு வைக்கப்பட்ட தொகை இரண்டு லட்சத்து முப்பத்தேழாயிரம் மட்டுமே புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக

கழகத்திற்கு ஆண்டு சந்தாவாக ரூபாய் முப்பது ஆயிரம் மட்டுமே செலுத்த வேண்டும், ரூபாய் ஐம்பது ஆயிரம் செலுத்தியதாக பொய் கணக்கு காட்டியுள்ளார். வீரமாகாளியம்மன் கோவில் திருவிழாவிற்காக ஒரு மண்டகப்படி தாரரிடம் ரூபாய் ஐந்து லட்சம் மட்டுமே பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தலைவராக இருந்த காமராஜ் தனது மனைவி முருகேஷ்வரி பெயரில் ஐந்து லட்ச ரூபாய் நன்கொடையாக வர்த்தக சங்கத்துடன் இணைந்து தருவதாக சொன்னார். ஆனால் வர்த்தக சங்க பதிவேட்டில் ரூபாய் பதினான்கு லட்சத்து பத்தாயிரம் கொடுத்ததாக வரவு வைக்கப்பட்டது. முருகேஷ்வரி பெயரில் ரூபாய் 5 லட்சம் தராமல், வர்த்தக சங்கத்தில் கணக்கில் இருந்த பணத்தை கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்தது தவறாகும். இந்த வகையில் ரூபாய் ஐந்து லட்சத்து இரண்டாயிரம் பொய் கணக்காகும், வரவு செலவு பதிவேட்டில் கடந்த 15.12.2022 ஆம் தேதி மண்டப்படி பூஜைக்கான செலவில் ஐம்பத்திஏழாயிரம் மட்டுமே செலவு செய்திருக்க வேண்டும். ஆனால் பொய்யாக இரண்டு லட்சத்து ஐம்பத்திஏழாயிரம் கணக்கில் எழுதி, இரண்டு லட்சத்திற்கு பொய் கணக்கு எழுதியுள்ளார். மாநில துணைத்தலைவர் பதவிக்காக ரூபாய் ஏழு லட்சத்து ஆயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஏழு செலவு கணக்கு காட்டியுள்ளார். தனது சொந்த செலவில் செய்ய வேண்டிய பதவியேற்பை அறந்தாங்கி வர்த்தக சங்க பொதுப்பணத்தில் இருந்து எடுத்து செலவு செய்துள்ளார். இந்த வகையில் ரூபாய் ஏழு லட்சத்து ஆயிரத்து அறநூற்று தொண்ணூற்று ஏழு ரூபாய் சங்க பணத்தினை கையாடல் செய்துள்ளார். அவர் அளித்த வரவு செலவு கணக்கினை நிர்வாக குழுவினர் அழைத்து பேசியும் பதிவு தபால் மூலம் நோட்டீஸ் அனுப்பியும் எந்த வித முறையான தகவலையும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் நிர்வாக குழுவினர் கூடி சம்மந்தப்பட்ட திரு.காமராஜ் மீது முறையான புகார் அளித்து நீதிபரிபாலனை தகுந்த தீர்வு எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு கடந்த 21.08.2025 அன்று அறந்தாங்கி வருவாய் கோட்டாச்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு நேரடியாகவும், பதிவு தபாலின் மூலமாகவும் புகார் அளிக்கப்பட்டது. மேலும் கடந்த 22.08.2025 ஆம் தேதியன்று மாவட்ட குற்ற பிரிவு காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் அனுப்பப்பட்டது. இதுவரையிலும் எந்த விசாரணையும் நடைபெறாத காரணத்தினால் சமூகம் கோர்ட்டார் அவர்களிடம் உரிய நீதி கேட்டு எதிரி காமராஜ் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும் படி இந்த வாக்குமூலத்தினை அளிக்கிறேன். இத்துடன் எனது தரப்பில் **வர்த்தக சங்க தணிக்கை குழு ஆய்வு செய்த கணக்கு விவர ஆவணத்தின் நகல் ம.சா.ஆ.1** ஆகவும், கடந்த 21.08.2025 அறந்தாங்கி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும், வருவாய் கோட்டாச்சியர் அவர்களுக்கும் அனுப்பிய புகார் கடிதத்தின் **அலுவலக நகல் ம.சா.ஆ.2** ஆகவும், மேற்படி கடிதத்தை புதுக்கோட்டை மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிதற்கான **அலுவலக நகல் ம.சா.ஆ.3** ஆகவும், **மனுதாரரின் ஆயுள் கால உறுப்பினர் சான்றிதழ் ம.சா.ஆ.4** ஆகவும், கடந்த 22.08.2025 ஆம் தேதியன்று பதிவு தபால் பெற்றுக்கொண்டதற்கான **ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.5** ஆகவும் எனவே எதிரி மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை மற்றும் மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். Crl.M.P 298 /2025**
**வழக்கு சாட்சி. ம.சா.2**

மனுதாரரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி **Tmt.Sahanathirushya, Grade-III Bench clerk**, என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கருப்பையா | **வயது** | : | 55/2025 |
| **தந்தை பெயர்** | : | வெள்ளைச்சாமி | **தாலுகா** | : | |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |

**<u>நாள்: 09.01.2026</u>**

**<u>ம.சா.2</u>**

**Sworn Statement:**

நான் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தில் கடந்த 30 ஆண்டுகளாக இன்றுவரையும் வர்த்தக சங்க துணை செயலாளராக இருந்து வருகிறேன். எதிரி காமராஜ் தலைவராக இருந்த சமயத்தில் வர்த்தக சங்கத்தின் மாத சந்தா, ஆண்டு சந்தா, ஆயுள் சந்தா மற்றும் மண்டப வாடகை, திருவிழா வரவு செலவு என அடிப்படையில் எதிரி காமராஜ் இருந்த காலத்தில் ரூபாய் ஒரு கோடி வரவு ஆகி இருந்தது. வர்த்தக சங்கத்தின் படி ரூபாய் 500/- மட்டுமே கையில் வைத்திருக்க வேண்டும். மற்ற பண வரவு செலவுகளை வங்கியில் வரவு செலவு செய்திருக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக சங்கத்திற்கு அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் மூலமாக ரூபாய் முப்பது ஆயிரம் கொடுக்க வேண்டும். எதிரி காமராஜ் ரூபாய் ஐம்பது ஆயிரம் கொடுத்ததாக பொய்யாக கணக்கு காட்டியுள்ளார். அறந்தாங்கி வீரமாகோவில் கும்பாபிசேகத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் முருகேஷ்வரி பெயரில் கொடுத்துவிட்டு பத்து லட்சம் சங்க பணத்தில் இருந்து கொடுத்ததாக பொய்யான கணக்கு காட்டியுள்ளார். ஆடிட்டரை வைத்து தணிக்கை செய்ததில் இதுபோன்று மோசடிகள் செய்தது சொல்லப்பட்டிருந்தது. மேற்படி மோசடி சம்பந்தமாக நேரடியாகவும், தபால் மூலமாகவும் கேட்டதற்கு எதிரி காமராஜ் எவ்வித பதிலும் தெரிவிக்காததால், காவல் துறை அதிகாரிகளுக்கும் மற்ற நபர்களுக்கும் புகார் அளித்தும் பலன் இல்லை. கடந்த வீரகாளியம்மன் கோவில் திருவிழாவில் திருவிழா செலவில் கடந்த 15.12.2022 ஆம் தேதியன்று செய்த செலவு விவரத்தை முறையாக

எதிரி ஒப்படைக்கவில்லை. எனவே எதிரி மீது நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை மற்றும் மறுவிசாரணை:**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**அறந்தாங்கி.**